**பேராதனை பல்கலைக்கழகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 08 ஆம் பந்தியின் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்குரிய தொல்பொருளியல் நூதனசாலையிலும் பிரதான நூலகத்திலும் உள்ள புராதன சொத்துக்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கலை பீடத்திற்குரிய தொல்பொருளியல் நூதனசாலையிலும் பிரதான நூலகத்திலும் உள்ள புராதன சொத்துக்களை இனங்கண்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 08 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டு குறிப்புக்கள் இலக்கம் 1.3.6.9 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான மாவலவத்த இல் அமைந்துள்ள காணியில் 07 ஏக்கர் 02 | 07 ஏக்கர் 02 ரூட் அளவிலான மாவலவத்த காணிப் பகுதி அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு சட்ட ரீதியாக வழங்குவதற்கு | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான காணியை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுககளில் |

| | | | |
|---|---|---|---|
| | ரூட் அளவிலான காணி கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அக்காணியின் பெறுமதி இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அக்காணியின் உரித்தினை கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் காணியின் உரித்து கையளிக்கப்படாமையால் அக்காணி சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதாக. | காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய கெட்டம்பேயில் அமைந்துள்ள 40 பேர்ச் அளவிலான காணி 1987 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி வரை 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் திவிநெகும திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை பணம் ரூபா 7,200,000 ஆன நிலுவை குத்தகைத் தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பெறவேண்டிய தொகை கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 திசெம்ப் 31 இல் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 6,580,000 ஆக இருந்த போதும் அத்தொகை கொடுப்பனவை திவிநெகும திணைக்களத்தின் மூலம் தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன. திவிநெகும திணைக்களத்திற்கு அக்காணியில் கட்டிடத்தை நிர்மணிப்பதற்கு ரூபா 11.56 மில்லியன் அளவில் செலவாகியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்துடன் அத்தொகையில் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகையை கழித்து எஞ்சிய தொகைக்குரிய அத்திணைக்களத்தை மேலும் நடாத்திச் செல்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆதனங்களின் முழு உரித்தையும் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதால் 2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அவர்களுக்கு கட்டிடம் பகுதியொன்றாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிட வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 12,400,466 தொகையான முதலீட்டு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய சேமிப்பு வங்கயிலுள்ள 7 நிலையான வைப்புக்களில் ஆண்டுக்குரிய வட்டித்தொகை கணக்காண்டின் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு காசோலை மூலம் கிடைத்துள்ளமையால் பெற வேண்டிய வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய முதலீட்டு வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | செலவிடப்படாத மூலதன மானியக் கணக்குகளின் செலவு மீதிகள் காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்குகளுக்குரிய மொத்தம் ரூபா 169,665,787 தொகையான அசாதாரண மீதிகள் காணப்பட்டன. | ஒவ்வொரு செயற் திட்டத்திற்காக போதியளவு அரசின் மானியங்கள் கிடைக்காததன் பேரில் கூடுதலாக பணமுள்ள மீதிகள் உள்ள செயற் திட்டங்களிலிருந்து நிதிக் குழுவின் அங்கீகாரத்துடன் காசு மீதிகளை மாற்றுவதற்கு நேர்ந்தது. மேலும் அந்த பல செயற்திட்டங்கள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்த செயற் திட்டங்களுக்கு மாத்திரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை பேணிச் செல்லும் 17.31 ஏக்கர் அளவிலான காணி பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி ஆணையாளர் திணைக்களத்தின் மூலம் குறித்த காணியை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கணக்கீட்டு எண்ணக்கருக்கள், விதிகள் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய மற்றும் மூலதன செயற்திட்டங்களுக்குரிய 2003 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கிடைத்த ரூபா 86,414,169 ஆன செலவினம் நடைமுறை வேலையாக (Working Progress) கீழ் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு வந்தன. | இச்செயற்திட்டம் வெவ்வேறு காரணங்களின் பேரில் மூலதனமாக்வதற்கு முடியாதிருந்ததாகவும் எனினும் இந்த அனைத்து செயற்திட்டங்களும் 2021 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு பாவனைக்காக எடுக்கும் சொத்துக்களை சரியாக இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணை முறிகளை மீறிய 116 | உடன்படிக்கைகளை மீறிய 66 | பிணை முறிகளை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 144,240,849 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் பிணை முறி மற்றும் உடன்படிக்கைகளை மீறி 01 ஆண்டு தொடக்கம் 50 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் அம்மீதிகளை அறவிடுவதற்காக முறையான நடைமுறையொன்றை பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரிவுரையாளர்கள் மிகவும் பழைய பிணை முறி மீறியர்வர்களாக இருந்ததுடன் அவர்களில் 04 பேர் அவர்களின் பிணை முறி பெறுமதியை தமது சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுதற்கு விருப்பத்தை தெரிவித்துள்ள போதும் ஆவணங்களிலுள்ள குறைபாடுகள் காரணமாக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுதல் தடைப்பட்டுள்ளது. மிகவும் பழைய பிணை முறி மீறிய விரிவுரையாளர்கள் தொடர்பாக காலாவதியாதல் காரணமாக சட்ட நடவடிக்கைகள எடுக்க முடியாத நிலைமையொன்று உள்ளதால் மாற்று வழி நடைமுறையொனன்று இல்லாமையால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக தீர்மானமொன்றை எடுப்பதற்காக கல்வி அமைச்சின் செயலாளர் 2021 ஏப்ரல் 24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 தொகை 08 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வண்டியின் எஞ்சிய மீதிகளை காப்புறுதி கம்பனிக்கு வழங்கி பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 400,000 தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களிலிருந்து 1980 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,996,292 ஆன மண்டபக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் 3 ஆண்டு முதல் 39 ஆண்டுகள் வரை காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,996,292 ஆன கிடைக்க வேண்டிய மண்டபக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணத்திலிருந்து ரூபா 173,588 ஆன முழுத் தொகை இதுவரை கிடைத்துள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | பெற வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்களிடமிருந்து | இந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை சேமலாப நிதியத்திலிருந்தும் பிணைமுறிகளிலிருந்தும் அவிடுவதற்கு தேவையான | பெற வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 1,355,275 ஆன கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (உ) | பல்கலைக்கழகத்திற்குரிய ஆதனங்களை வெளித்தரப்பினரால் பயன்படுத்தியமைக்காக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,908,359 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறவிட வேண்டிய தொகைகளில் சில செயற்திட்டங்களில் வாடகையை விடுவிப்பதற்குரிய உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய செயற்திட்டங்களுக்குரிய குத்தகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | பெற வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 ஒப்பந்தங்களுக்குரிய பிடித்து வைக்கப்பட்டுள்ள ரூபா 18,449,500 ஆன நிறுத்தி வைத்தல் தொகையை விடுவிக்கும் காலம் கடந்து 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் அந்நிறுத்திவைத்த பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்களுக்குரிய பிடி காசினை விடுவித்தல் ஒப்பந்தக்காரர்களின் வேண்டுகோள், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் நிலைமையை பரீட்சித்து உரிய பிரிவுத் தலைவர்கள் மற்றும் செயற்திட்ட முகாமையாளர்களின் பரிந்துரை என்பவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வறே இடைப் பட்டியல் கொடுப்பனவு செய்யும் போது கழிக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட பணமும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. நடைமுறை வேலைகளுக்குரிய அவ்வாறு கழிக்கப்பட்ட பணமும் இப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக. | செலுத்த வேண்டிய பிடிகாசினை முறையாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள | அனைத்து மிகை நிதிகளை மற்றும் நிதி அமைச்சரின் முன் அங்கீகாரத்தின் பேரில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் மூலம் மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் | 2020 ஆம் ஆண்டில் அனைத்து மிகை நிதியினையும் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்புக்களுக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக | அனைத்து மிகை நிதிகளை முதலீடு செய்யும் போது நிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | (நல்லாளுகைக்கான பொது முயற்சியாளர்களுக்கு) கைநூலின் 8.2.2 ஆம் பந்தி | ரூபா 21,000,000 தொகையொன்று அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது | கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வேண்டும் |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் -------------------------------------------------- | | | |
| | 15(VI) பிரிவு | ஒவ்வொரு உயர்கல்வி நிலையங்களிலும் வருடாந்தம் அனுமதிக்கப்பட வேண்டிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த மாணவர்களை வெவ்வேறு பாடநெறிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் முறை ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகை சபையிடம் வினவி பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிச்சயிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் பேராதனைப் பல்கலைக்ககழத்தின் பேரவையால் பொறியியல் பீடத்திற்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் கடந்த 11 ஆண்டுகளாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்க அதிகரிப்பதற்காக தேவையான நிதிஏற்பாடுகளையும் ஏனைகய வசதிகளையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரியிருந்த போதும் இதுவரை அதற்காகதேவையான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில் லை. | பல்கலைக்கழக சட்டங்களின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 1986 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட Schemes of Recruitmentand Procedure of Appointment வழிகாட்டல் கோவையின் 24 ஆம் வழிகாட்டி | தற்காலிக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது குறித்த பாடம் தொடர்பாக முதலாம் வகுப்பு அல்லது இரண்டாவது மேல் வகுப்பு சித்தியொன்றுடன் பட்டமொன்று இருக்க | தற்போது அவ்வாறான நிலைமையொன்று இல்லையென | வழிகாட்டல் கோவையின் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் சாதாரண சித்தியுடன் மற்றும் இரண்டாம் வகுப்பு கீழ் மட்ட சித்தியொன்றுடன் பட்டமொன்றை பெற்றுக்கொண்ட இரண்டு பேர் தொல்லியல் துறைக்கு தற்காலிக விரிவுரையாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | | |
| (ஈ) | 2011 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1/2011 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை | ஆராய்ச்சி செயன் முன்னேற்றம் தொடர்பாக உரிய காலத்தில் மதிப்பீடு செய்யாமல் முகாமைத்துவ பீடத்தின் கல்விசார் பதவியணியின் 39 உத்தியோகத்தர் களுக்காக ஆரம்ப சம்பளத்தில் 35 சதவீதமான ஆராய்ச்சி படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சிப் படிகளுக்காக பல்கலைக்கழக கல்வி பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அந்த படிகளை வழங்குவதற்கு சான்றுகளை வழங்குதல் அல்லது ஆராய்ச்சி செயன்முன்னேற்ற மீளாய்வு கட்டாயம் என குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும் இதன் பின்னர் எதிர்வரும் காலங்களில் கல்விசார் பதவியணியில் உறுப்பினர்களுக்காக ஆராய்ச்சி படிகளை கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கும் போது குறிப்பிட்ட படி தேவையான சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| | (i) 1.2.1 (இ) வழிகாட்டி | ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்குரிய ரூபா 45.5 மில்லியன் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கபபட்டு பொறியியலாளரால் அந்த திருத்தங்களுக்காக | அப்போது நியமிக்கப்பட்டிருந்த நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினரொருவராக வேலை பொறியியலாளர் | பெறுகை வழிகாட்டல் கோவையின் உரிய நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் அங்கத்தவரொருவராக அந்தப் பொறியியலாளரே செயற்பட்டிருந்தார். | நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக வேலை பொறியியலாளரின் நியமனம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 (இ) பிரகாரம் மேற்கொள்ளப்படும். | வேண்டும். |
| (ii) 7.9.2 (க) வழிகாட்டி | ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்காக ஒப்பந்தத்திற்குரிய பொறியியலாளரின் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தக்காரரின் மதிப்பீட்டிற்கு இடையே 52 உருப்படிகளில் 30 சதவீதம் முதல் 577 சதவீதம் வரை விலகலொன்று பொறியியாளர் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 8,217,408 ஆன விலை விபரங்களைச் சமர்ப்பித்திருந்த போதும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 2017 நவம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப முற்பணமாக ரூபா 14,039,397 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதாவது கால நீடிப்பின் பின்னர் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 2,135,946 ஆன செயலாற்றல் பிணையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்படுகின்ற கூறுவிலைகள் ஒவ்வொரு உருப்படியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத்திகதியில் காணப்பட்ட சந்தை விலை விபரங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த விலை விபரங்களைச் சமர்ப்பித்த பாம்ஹில் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் நியாயமானதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவதானித்து வழங்குவதற்காக பரிந்துரைத்துள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதி விளைவுகள் ரூபா 946,504,814 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 1,740,708.860 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 794,204,046 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மஹபொல மானியங்களுக்காக கிடைத்த நிதி, அரசின் மானியங்கள் அதிகரித்தமையும் பிரயாணச் செலவினம் மற்றும் தனிப்பட்ட சம்பளங்கள் படிகள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் பேரவை மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சீராப்பர் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,125,000 ஆன கட்டுநிதி தொடர்பாக 2020 திசெம்பர் 02 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 255,153 ஆன நிதிப் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | காசுப் பற்றாக்குறை தொடர்பாக முதல்கட்ட புலனாய்வொன்றை நடாத்தி தற்போது அது தொடர்பாக குற்றச்சாற்றுப் பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் அன் பிரகாரம் முறையான புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்குற்றச் சாட்டிற்கு உட்பட்ட சிறாப்பர் வேலை இடை நிறுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். | மோசடி மற்றும் முறைகேடுகள் இடம்பெறாத வகையில் செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பொறியியல் பீடத்தின் 02 திணைக்களங்களுக்குரிய 47 பொருட் கணிப்பீட்டு உருப்படிகளில் 83 அலகுகளில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கை யொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைச் சாத்தியமான சிக்கலொன்று காரணமாக இதற்கான நியமனம் செய்யப்பட்ட கணிப்பீட்டுச் சபைக்கு கூடுவதற்கு முடியாதிருந்தமையால் மீண்டும் கணிப்பீட்டுச் சபை கூடுவதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு பற்றாக்குறையை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரின் 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய HE/EST/01/01/PDN ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பரிசோதகர் II ஆந் தரத்தின் ஒரு வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் இந்த ஆட்சேர்ப்பிற்குரிய எழுத்துமூல பரிசோதனைக்காக வினாப்பத்திரம் அப்பாதுகாப்பு பிரிவிலேயே சேவையாற்றும் பிரதான ஒழுக்காற்று உத்தியோகத்தரால் தயாரிக்கப் பட்டிருந்தமையால் அதற்காக அவருக்கு சுயாதீன மொன்று காணப்படவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த பதவிக்குரியதாக நடைபெற்ற எழுத்துமூல பரிசோதனைக்காக குறித்த விடயம் தொடர்பாக அறிவினைக் கொண்டுள்ள நபரொருவர் நியமிக்கப்பட வேண்டியதுன் அன் பிரகாரம் ஒழுக்காற்று உத்தியோகத்தர் பதிவாளரின் பரிந்துரையின் பேரில் உப வேந்தரின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்கள் குறித்த துறைன் அறிவினையும் கருத்திற் கொண்டு விரைவில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | ஆட்சேர்ப்பிற்கான பரீட்சைகளை நடாத்தும் போது சுயாதீன தரப்பினரைக் கொண்டு வினாப்பத்திரங்களை தயாரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | ரூபா 384,281,795 மதிப்பீட்டுப் பெறுமதியான 4 செயற்திட்டங் களுக்குரிய திட்டங்களைத் தயாரித்தல், திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப கேள்வி கோரல் குழுவில் உறுப்பினர் ஒருவராக பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையின் ஒருவர் செயற்பட்டிருந்தார். | பேரவை அங்கீகாரத்துடன் எவ்வித பணமும் செலுத்தப்படாது இச்சேவை ஆளுகை சபை உறுப்பினரால் நிறைவேற்றப்பட்டிருந்ததாக | ஆளுகை சபை உறுபபினரொருவர் பல்கலைக்கழகத்துடன் தொடர்பான உடன்படிக்கைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிப்படையான தொடர்பு இருக்கக் கூடாது. |
| (இ) | 2017 ஆம் ஆண்டு முதுல் 2020 ஆம் ஆண்டு வரை பொறியியல் பீடத்தின் 07 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளுக்காக 628 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அதற்காக ரூபா 166,550,000 ஆன பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. இருந்த போதும் அப்பாடநெறி களுக்காக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அப்பாடநெறிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 02 ரூட் 35.5 பேர்ச் அளவிலான காணி பகுதி 1993 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பேராதனைப் பொலிஸ் நிலையத்தினை நடாத்திச் செல்வதற்கு மீண்டும் விடுவிக்கப்பட்ட அடிப்படையில் தற்காலிகமாக பொலிஸ் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும் அக்காணி தொடர்பாக குத்தகையொன்று அறவிடுவதற்கோ அவ்விடத்தை பொலிஸ் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது அவ்விடத்தில் பேராதனை பொலிஸ் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அக்காணியை பொலிஸ் திணைக்கள்திற்கு கையளிக்குமாறு 2020 யூன் 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் காணி ஆணையாளர் நாயகம் அறிவூட்டப்பட்டுள்ளார். | கையளிப்பு செயற்பாடுகளை விரைவில் மேற்கொள்வதற்கும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 01 ரூட் 15.56 பேர்ச் அளவிலான காணி பகுதி 1997 ஆம் ஆண்டு முதல் மற்றும் 02 ரூட் 33.5 பேர்ச் அளவின காணிப் பகுதி 1993 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை முறையே கங்கவட்ட கோரளை பிரதேச சபையாலும் பொலிஸ் திணைக்களத்தினாலும் உடமை கொள்ளப்பட்டு இருந்தும் அந்த ஆதனங்கள் தொடர்பாக எவ்வித குத்தகையொன்றும் அறவிடுவதற்கோ அல்லது கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணி 1996 ஆம் ஆண்டின் போது மாத்திரம் குறுங்கால அடிப்படையில் கங்கவட்ட கோரள பிரதேச சபைக்கு வாரச் சந்தையொன்றை நடாத்துவதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 1997 ஆம் ஆண்டின் பின்னர் அதற்காக செல்லுபடியான ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் அண்மையில் கங்கவட்ட கோரள பிரதேச சபை மூலம் காணிக்கு அத்துமீறி நுழைந்து அக்காணியில் அனுமதியற்ற வியாபார கூடங்கள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்கு எதிராக கண்டி மேல் நீதி மன்றத்தில் 226/19 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | காணியை மீளப் பெற்று நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 22 ஆந் திகதி வேலைத் திணைக்களத்திற்கு சேவைக்கு அறிக்கையிட்டு 05 ஊழியர்கள் மற்றும் அத்திகதி சேவைக்கு அறிக்கையிடாத மின் தொழில்நுட்பவியலாளர் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கெப் வண்டியையும் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் பேராதனையில் அமைந்துள்ள தனிப்பட்ட வீட்டினை திருத்தியமைத்தல் மற்றும் நிர்மாண | பல்கலைக்கழகத்தின் பேரவையால் பதிவாளர் 2021 சனவரி 04 ஆந் திகதி முதல் ஆரம்ப பரிசோதனைக்கு உட்பட்டு மீண்டும் அறிவிக்கும் வரை கட்டாய லீவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேலும் மேற்படி புலனாய்வுக் குழு அறிக்கையை அடிப்படையாக கொண்டு மூதவையால் குறித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் | ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தும் போது முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்றுடன் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்திகதியில் வேலைத் திணைக்களத்தின் உபகரணங்கள் விநியோகிக்கும் பதிவேட்டின் பிரகாரம் 15 உபகரணங்கள் மேற்படி நிர்மாண செயற்பாட்டுடன் தொடர்பான ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தன. | எடுக்க வேண்டிய முறை தொடர்பாக கௌரவ சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெற்றுக்கொண்டதன் பின்னர் இச்சம்பவம் தொடர்பாக பேரவையால் உரிய தீர்மானங்கள் வழங்கப்படும். | |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்திற்காக கணக்கு மற்றும் ஊழியர் சம்பளக் கொடுப்பனவிற்காக கணனி மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 7,514,311 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2017 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு அதற்காக 2018 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 5,956,162 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த உடன்படிக்கையின் இக் கணனி முறை 2019 ஏப்ரல் 29 ஆந் திகதிக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிர்வாகத் துறைக்காக கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக தற்போது ஊழியர்களுக்கு கணக்கீட்டு மென்பொருள் தொடர்பாக பயிற்சியொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மொடியுல் (Modules) களில் தரவு கணனிக்கு உட்படுத்தப்படுகின்றது. அவ்வாறே விரைவில் இம்முறைமை மூலம் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை காலப்பகுதிக்குள் குறித்த ஊழியர்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பொறியியல் பீடத்திற்கு 09 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 4,792,000 ஆன மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 05 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை வழங்குவதற்கு குறிக்கப்பட்ட காலம் முடிவடைந்து 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணையில் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிகள் தாமதமாவதற்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டு இந்த ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்காக கால நீடிப்பொன்று வழங்குமாறு உரிய ஆராய்ச்சி யாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டு ஆராய்ச்சிக் குழுவிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. | ஆராய்ச்சி செயற்பாடுகள் முடிவடைந்த உடன் குறித்த ஆராய்ச்சி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் பதவியணியினருக்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் முழுமையாக மூடப்பட்டிருந்தமை மற்றும் பல்கலைக்கழக பதவியணியினருக்கு வருகை முழுமையாக மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. மாணவர்களுக்காக முழுமையாக மூடப்பட்டிருந்த 195 நாட்கள் மற்றும் பதவியணியினருக்காக 34 நாட்களுக்காக பதவியணியினர் வரையறுக்கப்பட்டிருந்த 121 நாட்கள் தொடரபாக கருத்திற் கொள்ளாமல் இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டில் முழு மாதக் கட்டணங்களான ரூபா 3,845,887 வீதம் குறித்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த மற்றும் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதிக்காக LEARN நிறுவனத்திற்கு முழு மாதாந்த பட்டியல் கொடுப்பனவு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் (NCSU) பணிப்பாளரின் பரிந்துரையின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மாதாந்த பட்டியல் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பாக (NCSU) நிறுவனத்தின் மூலமும் சாதாரண சேவை இலக்கம் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் தொல்பொருளியல் துறையின் Master Landscape Archeology பட்டப்படிப்பு பாடநெறியை செயற்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்தினால் Universitat Berlin இற்கு இடையே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக வழங்குவதற்கு இணங்கியிருந்த 33400 யூரோ கொடுக்கல் வாங்கல்களுக்குரிய எந்தவொரு நிதி அறிக்கை அல்லது கோவையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் செயற்திட்டத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதி முடிவடைந்து 04 ஆண்டுகள் காலமொன்று கடந்திருந்த போதும் இதுவரை Master Landscape Archeology பட்டப்படிப்பு நிகழ்ச்சி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் 10, 11 மற்றும் 12 இலக்க பிரிவுகளின் பிராகாரமான விடயங்கள் சரியானதாகும். குறித்த நிதி அறிக்கை கோவைகளின் பிரதிகள் தொல்பொருளியல் துறையின் பிரிவுத் தலைவரின் மூலம் பரீட்சித்துக் கொள்ளலாம். | பீடங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பாக முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 19 மீண்டெழும் செயற்திட்டங்களை (Rehabilitation) ஆரம்பிப்பதற்காக முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 2,235,939 தொகையான முற்பண மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு | இச்செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்கள் நாட்குறிப்பு பதிவு மூலம் 2021 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய செயற்திட்டங் | குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் முடிவடைந்த உடன் முற்பணங்களைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுக்குரிய கொடுப்பனவு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து தீர்வு செய்யப்பட்டன. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாண செயற்திட்டங்கள் 15 இற்குரிய வேலை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் தீர்வு செய்யப்படாத மீதி ரூபா 253,916,904 ஆக இருந்தது. | நிர்மாணங்களிற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய பதிவேடுகள், நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய புத்தகத்தில் 175 பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தீர்வுசெய்யாத முற்பணங்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 7,586,873 செலவிடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட கலை கூடம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்ற வகையில் காணப்படுவதுடன் தற்போது கட்டிடத்தை பயன்படுத்த முடியாத நிலைமையில் உட்கூரையும் பழுதடைந்து உடைந்து வீழ்ந்து காணப்பட்டது. | ரூபா 82.2 மில்லியன் மதிப்பீட்டின் மீது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களின் நம்பிக்கை நிதிய சபை மூலம் நிதியத்தை வழங்கியதன் மூலம் செயற்படுத்தவதற்கு 2012 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் அதன் ஒரு பகுதி பங்களிப்புச் செய்யப்பட்ட உதவி அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது, எனினும் முழு செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக இறுதி செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமையில் இருந்தது. எவ்வாறாயினும் பழைய மாணவர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை மூலம் வழங்கப்படட நிதி ஏற்பாட்டின் பேரில் சில விடயங்களை படிப்படியாக நிர்மாணிப்பற்கு திட்டமிடப்பட்டு உள்ளதுடன் முழு செயற்திட்டமும் முடிவடைந்ததன் பின்னர் | கட்டிட நிர்மாணத்தின் போது முறையான மதிப்பீட்டு ஒன்றுடன் உச்ச அளவில் பயன்படுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | "Establishment of a Foundation Grant for Annual Awards for Research Excellence" நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி பேராசிரியர்களிடமிருந்து கிடைத்த ரூபா 1,500,000 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் நானாவித வைப்புக்களின் கீழ் காண்பித்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி பல்கலைக்கழக ஆராய்சசி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | இந் நிதிய மீதிகள் பல்கலைக்கழக ஆராய்ச்சி சபை மூலம் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதற்கு உள்ளது. | ஆராய்ச்சி நிதியங்களை உரிய காலப்பகுதியில் உச்சமட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| "National Survey on Persistant Organic pollutant in Braest Milk" ஆராய்ச்சி செயற்திட்டத்தின் பிரகாரம் தாய் பாலில் பான் துணிக்கைகள் அடங்கியுள்ளதா எனப் பரீட்சிப்பதற்கு நாட்டின் அனைத்து பிரதேசங்களும் மேவுகை செய்யக்கூடிய வகையில் மாதிரி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக சீனாவிற்கு அனுப்புதல் மற்றும் அதன் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்து ஆராய்ச்சி அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை காலம் முடிவடைந்து 09 மாதங்கள் கடந்திருந்த போதும் அச்செயற்பாடுகளை நிறைவேற்றாமை காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் எதுவும் அறிக்கை தகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடத்தினுள் திட்டம் நிறைவு செய்யப்பட்டு அமைச்சிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதாக. | உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லைக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்கலைக்கழகத்தின் ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 49,126,740 தொகைக்கு 2017 நவம்பர் 09 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் சரியான மதிப்பீடு தயாரிக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,390,671 பெறுமதியான திருத்த வேலைகள் வேலைத் துறை மூலம் நேர் உழைப்பின் கீழ் நிறைவேற்றுவதற்கு நேர்ந்திருந்தது. | 2016 ஆம் ஆண்டின் போது அப்போது காணப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 45.55 மில்லியன் ஜயதிலக்க மண்டபத்தின் புனரமைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையில் அப்போது காணப்பட்ட பிரதான மற்றும் அத்தியவசிய புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மதப்பீடு தயாரிக்கப்பட்டது. | சரியான மதிப்பீட்டின் பிரகாரம் போதியளவு மதிப்பீடொன்றும் கண்காணிப்பொன்றின் கீழ் அனைத்து நிர்மாணங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்ககாக 2017 நவம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அதற்காக ரூபா 14,039,397 தொகை ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தியிருந்த போதிலும் திருத்த வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு வேலைத்தளம் முற்பணம் செலுத்தி 06 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2018 மே மாதம் 03 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. | ஜயதிலக்க விடுதியின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளும் போது மலசலகூட முறைமையை அண்மித்து கொங்ரீட் தளங்களில் சாந்து கலன்று போவது இடம்பெற்றது. உரிய சிலப்பை அகற்றி புதிதாக இடுவதற்காக கூறுவிலை கோரி குறைந்த விலை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கியதால் ஜயதிலக்க மண்டபத்தின் புனரமைப்பு பகுதிகளை பூர்த்தி செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நேர்ந்தது. | பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிரமாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்ககாக காலம் நீடிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் அந்நடவடிக்கைகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்கு ஒப்பாக ரூபா 2,135,946 தொகையான செயலாற்றல் பிணை முறியை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஒப்பந்தக்காரரின் பொறுப்பிலிருந்து விலகி செயற்படுத்த நேர்ந்த திருத்த வேலைகள் காரணமாக உரிய காலப்பகுதிக்கு மேலாக செயலாற்றல் பிணை பொறுப்பு நீடிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தற்போது அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிரமாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்குரிய வேலை பொறியியலாளரால் சான்றுறுதிப் படுத்தப்பட்ட பொறியியல் மதிப்பீடு மற்றும் அதனை தயாரிப்பதற்காக அடிப்படையாக கொண்ட விலை பகுப்பாய்வுகள் மற்றும் அதற்குரிய அளவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த ஒப்பந்தக்காரரின் பொறியியல் மதிப்பீடு மற்றும் விலை பகுப்பாய்வுகள் மற்றும் உரிய அளவீட்டு விபரங்கள் வேலை பொறியியலாளரின் அலுவலக அறையில் இருந்ததுடன் தற்போது அவை காணாமல் போயுள்ளன. | மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குரிய அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | விஜேவர்தன விடுதியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 240.51 மில்லியன் 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 2018 மே மாதம் ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 40,017,474 தொகை செலுத்தியிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் செலுத்தி 09 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2019 பெப்ரவரி 08 ஆந் திகதியே வேலைத்தளம், கையளிக்கப்பட்டிருந்தது. | பெறுகை செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதியை புனரமைக்கும் செயற்பாடுகளுக்காக விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இங்கு மாணவர்களின் விடுதிப் பிரச்சினை காரணமாக எழுந்த எதிர்ப்பின் பேரில் குறித்த விடுதி திருத்தங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு கையளிக்க தாமதம் ஏற்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | அருணாச்சலம் விடுதியின் திருத்த வேலைகளுக்காக 2018 சனவரி 08 ஆந் திகதி ரூபா 45.18 மில்லியனிற்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 2019 யூலை மாதம் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 7,102,351 தொகை செலுத்தி ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் வேலையை அரம்பிப்பதற்காக ஒப்பந்தக் காரருக்கு வேலைத்தளம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.. | ஜயதிலக்க மற்றும் அருணாச்சலம் ஆகிய மண்டபங்களையும் ஒரே தடவையில் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் ஜயதிலக்க மண்டபத்தின் திருத்த வேலைகள் தாமதித்தமை காரணமாக மாணவர்களை தங்க வப்பதற்கு முடியாதிருந்ததாகவும் ஆதலால் அருணாச்சலம் மண்டபத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தக்காரரால் ஆரம்ப முற்பண பிணை முறி 2021 மே வரை நீடிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது முறையே 244 மற்றும் 269 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்நிலைமை பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் உச்ச அளவிலும் நடாத்திச் செல்லக்கூடிய வகையில் தாக்கமளிக்க கூடியதாக இருப்பதால் வெற்றிட பதவிகளுக்காக பதவியணியினரை ஆட்சேர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | பல்கலைக்கழகத்தில் கலவிசாரா பதவியணியில் காணப்படும் 259 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்குரிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்விசார் பதவியணியில் காணப்படும் 244 வெற்றிடங்களை 2021 ஆம் ஆண்டில் நிரப்புவதற்காக பத்திரிகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள உள்ளது | பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை உயர்ந்த அளவில் மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |